# அக்குரஸ்ஸ பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 செப்தெம்பர் 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஒக்தோபர் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் அக்குரஸ்ஸ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அக்குரஸ்ஸ பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய சொத்தக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஆரம்ப மீதிகளை கணக்குகளில் வைப்பதற்காக நாட்குறிப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் வருமானச் செலவினக் கணக்குகளிற்கு மாற்றுவதற்காக நாட்குறிப்புப் பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இடர் முகாமைத்துவ நிலையத்தில் இருந்து 2007 மார்ச் 02 ஆந் திகதி சபைக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த இரண்டு படகுகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 16,780 தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் நீதி மன்றத் தண்டப் பணமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,640,396 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,555,458 ஆக இருந்தமையால் ரூபா 2,915,062 தொகை வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 65,244,151 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு மதிப்பீட்டுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | விதி 217, 218 | ஓவ்வொரு கணக்காண்டிலும் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் நிலையான சொத்துக்கள் மற்றும் ஏனைய பொருட்களுக்காக மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | நி.பி. 135 | உத்தியோகத்தர்களுக்கு நிதிசார் அதிகாரங்கள் எழுத்து மூலமாக சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,602,123 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,932,770 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 ரூபா. | 2009 ரூபா. | % | % |
| ஏக்கர் வரி | 56 | 48 | 16.6 | - |
| நீர்க் கட்டணம் | 742 | 565 | 31.3 | - |
| வாடகை | 2,035 | 2,363 | - | 13.9 |
| நில வரி | 328 | 173 | 89.6 | - |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 56,428 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 கடை வாடகை வருமானம்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் அக்குரெஸ்ஸ நகர வியாபாரத் தொகுதியில் 114 கடைகளிலிருந்தும் ரூபா 9,659,862 தொகையான ஒன்று சேர்ந்த முற்பணம் அறவிடவேண்டியிருந்தது. அவ்வாறே ஒப்பந்த நிபந்தனை இல. 04 இன் பிரகாரம் கடை வாடகை செலுத்தாத கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 1,765,536 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) அக்குரெஸ்ஸ நகர வியாபாரத் தொகுதியில் 12 கடைகள் மீளக் கையேற்கப்பட்டிருந்ததுடன் அக்கடைகளிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ரூபா 12,157 தொகை நிலுவைக் கட்டணம் அறவிடவேண்டியிருந்ததுடன் ஒப்பந்தத்தின் நிபந்தனை இல. 25 இன் பிரகாரம் காலம் கடந்திருந்த 12 கடைகளுக்காக திரும்ப ஒப்பந்தக் கைச்சாத்திடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம்**

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 273,693 இற்கான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.5 முத்திரைக் கட்டணம்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் ரூபா 340,997 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | **2010** | | | **2009** | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவு விடயம்** | **பாதீடு** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீடு** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவுகள்** | **ரூபா. 000’** | **ரூபா. 000’** | **ரூபா. 000’** | **ரூபா. 000’** | **ரூபா. 000’** | **ரூபா. 000’** |
| ஆளுக்குரிய வேதனம் | 18,958 | 15,949 | 3,009 | 18,958 | 15,242 | 3,716 |
| ஏனையவை | 10,714 | 11,418 | (704) | 10,714 | 9,183 | 1,531 |
| உப கூட்டுத் தொகை | 29,672 | 27,367 | 2,305 | 29,672 | 24,425 | 5,247 |
| மூலதன செலவுகள் | 37,283 | 27,576 | 9,707 | 37,283 | 30,923 | 6,360 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கூட்டுத் தொகை | 66,955 | 54,943 | 12,012 | 66,955 | 55,348 | 11,607 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | - |
| இரண்டாம் தரம் | 20 | 16 |
| ஆரம்ப தரம் | 45 | 26 |
| ஏனையவை(அமைய,தற்காலிக) | 18 | 21 |

(அ) மீளாய்வாண்டிற்கான பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 15,949,626 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 15,594,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 355,626 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 21 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 1,978,619 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சுற்று நிருப அறிவுரைகளை மீறும் வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,215,269 ஆகும்.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

2.6.1 மீளாய்வாண்டில் 13 சபை உறுப்பினர்களுக்காக ரூபா 798,000 தொகை உறுப்பினர் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 12 சபைக் கூட்டங்களுக்காகவும் 05 உறுப்பினர்கள் மாத்திரமே சமூகமளித்திருந்தனர்.

2.6.2 2010 ஆம் ஆண்டின் பாதீட்டில் ரூபா 1,750,000 தொகையான 22 உத்தேச வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்உத்தேசத் திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் உறுப்பினர்களின் ஏனைய 13 உத்தேச வேலைகள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. மேலும் மாகாண சபைத் திட்டங்களுக்குரிய 03 நிர்மாணவேலைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 140,000 பணத்திலிருந்து அவ்வேலை அமுல்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.6.3 சபைக்குச் சொந்தமான மூன்று பொது நூலகத்தில் வாசகர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு மீள ஒப்படைக்கப்படாத ரூபா 13,713 பெறுமதியான 116 புத்தகங்களின் பெறுமதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.6.4 சபை அதிகாரப் பிரதேசத்தில் கிராம வரைபடம் இல. 179 இல் குறிப்பிடப்பட்ட சபைக்குச் சொந்தமான லொட் இல. 154 கப்பிதன்கொடவத்த என்ற பெயருடைய ரூபா 166,800 பெறுமதியான 03 றூட், 18 பேர்சஸ் பரப்பளவுள்ள காணியின் அளவு 03 பேர்சஸ் ஆக காணி மற்றும் கட்டிடப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2007 யூலை 31 அந் திகதி மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டிருந்த காணியின் ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முரணாக இரண்டு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை 2011 ஒக்தோபர் 28 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.7 சட்டரீதியற்ற நிர்மாணங்கள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2008 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை 25 சட்டரீதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இச்சட்டரீதியற்ற நிர்மாணங்களுக்காக சட்டரீதியற்றவர்களுக்கு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டதைத் தவிர வேறு சட்டரீதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடவிண்ணப்ப இல. பீஏ/76/2007 இற்குரிய அக்குரெஸ்ஸ, புதிய வீதி இல. 23 என்ற இடத்தில் 143.85 சதுர மீற்றர் பரப்பில் இரண்டு மாடிக் கட்டிடத்திற்காக 2008 மார்ச் 13 ஆந் திகதியில் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பின்பற்றாமல் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ் இன்றி வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை 2011 ஒக்தோபர் 28 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

- * இக்கட்டிடம் வீதியின் மத்திய கோட்டிலிருந்து கட்டிட எல்லை 40 அடியாக இருக்க வேண்டிய போதிலும் பௌதீக ரீதியில் 32 அடியாக இருந்ததுடன் கட்டிட வரைபடத்திட்டம் அழிக்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

- * நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1986 மார்ச் 10 இன் 392/9 ஆம் இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரசுரிக்கப்பட்டிருந்த விதிகளின் பிரகாரம் இக்கட்டிடத்தின் தரைமாடியில் இருக்க வேண்டிய வாகனத் தரிப்பிடம் காணப்படாதிருந்தமை 2011 ஒக்தோபர் 28 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அறவிடவேண்டியிருந்த ரூபா 500,000 தொகையான கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 05 சட்டரீதியற்ற வியாபாரக் கட்டிடங்களில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தகமானி அறிவித்தலின் 6(ii) ஆம் பந்தியின் பிரகாரம் உறுதிப்படுத்தும் அங்கீகாரம் வழங்கும் போது அறவிடவேண்டியிருந்த ரூபா 935,140 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதிய அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்